சார்பு நீதிமன்றம், பெருந்துறை

## MCOP No: 205/2019

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அமுதா | ஜாதி | |
| க பெ | ரங்கசாமி | மதம் | |
| கிராமம் | அம்பத்தூர் | தொழில் | |
| மாவட்டம் | | வயது | 45 |

ம.சா. **1** நாள் **06.03.2025**

முதல் விசாரணை: **(**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்**)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் 3ம் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1 | திங்களூர் காவல் நிலைய கு எண் 263/2018 ல் உள்ள முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் | மசாஆ 1 |
| 2 | பார்வை மகசர் நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 2 |
| 3 | மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 3 |
| 4 | விபத்து பதிவேடு நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 4 |
| 5 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN 56 4573) நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 5 |
| 6 | இறுதியறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 6 |
| 7 | பெருந்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற எஸ்டிசி எண் 431/2019 ன் தீர்ப்பு நீதிமன்ற சான்றிட்ட நகல் | மசாஆ 7 |
| 8 | என் மாமனார் செங்கோடனின் இறப்பு சான்று ஆன்லைன் நகல் | மசாஆ 8 |
| 9 | என் மாமனாரின் வாரிசு சான்று ஆன்லைன் நகல் | மசாஆ 9 |
| | .5. | |
| 10 | 15.11.2018 முதல் 26.11.2018 வரையான ஈரோடு அரசு | மசாஆ 10 |

| | | |
|---|---|---|
| | மருத்துவமனையில் என் மாமனார் சிகிச்சையில் இருந்தார் என்பதை காண்பிக்கும் மருத்துவமனை வெளியேற்றுக் குறிப்பு | |
| 11 | 26.09.2021 முதல் 05.10.2021 வரையல் கல்யாணி கிட்னி சென்டரில் என் மாமனார் சிகிச்சை பெற்றதற்கான பில் ரூ.1,31,526/-க்கானது. (3 | மசாஆ 11 |
| 12 | மருந்து  மற்றும் மருத்துவமனை பில்கள் ரூ.34,357/-க்கானது | மசாஆ 12 |
| 13 | எம்ஆர்ஐ ஸ்கேன் ரிப்போர்ட் | மசாஆ 13 |
| மசாஆ 11 முதல் 13 வரையான ஆவணங்கள் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்  ஆட்சேபனைக்குட்பட்டு  குறியீடு செய்யப்பட்டது. | | |

மனுப்படி உத்திரவாக கோருகிறேன்.

**3** ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சைக்கிள் ஓட்டி சென்று கொண்டிருந்த செங்கோடன் திடீரென சாலையை குறுக்கே கடந்து ஒன்றாம் எதிர்மனுதாரர் ஒட்டி வந்த வாகனத்தை கவனிக்காமல் ஒன்றாம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் இறந்து போன செங்கோடன் தான் என்றும் அதனால் நான் மூன்றாம் எதிர் மனுதாரர் இடம் எந்த இழப்பீடும் கோர இயலாது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட தேதி 15.11.2018 என்றால் ஆமாம். விபத்து தேதி முதல் 26.11.2018 தேதி வரையில் இறந்து போன செங்கோடன் ஈரோடு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றால் சரி. இறந்து போன செங்கோடனுக்கு விபத்தின் காரணமாக கழுத்தின் பின்புறத்தில் எலும்பு முறிவு மட்டும் தான் இருந்தது என்றும் அதை தவிர்த்து கொடுங்காயங்கள் எதுவும் அவருக்கு வேறு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காயச் சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 4 ல் ஒரே ஒரு கொடுங்காயம் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மசாஆ 6 ல் செங்கோடனுக்கு கழுத்தின் பின்புறம் ஒரே ஒரு கொடுங்காயம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

மேற்படி காயத்தை தவிர வேறு கொடுங்காயம் செங்கோடனுக்கு விபத்தினால் ஏற்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மசாஆ 11 ல் செங்கோடனின் வயது 75 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் மாமியாருக்கு வயது தெரியாமல் அவ்வாறு சொல்லி உள்ளார், அதை குறிப்பிட்டுள்ளார்கள். இறந்து போன செங்கோடனுக்கு ஆதார் கார்டு, குடும்ப அட்டை போன்றவை உள்ளதா என்றால் ஆமாம். அவற்றைப் பார்த்தால் அவருடைய உண்மையான வயது என்னவென்று தெரியும் என்றால் சரி. அதேபோன்ற ஆவணங்கள் எதுவும் எனது தரப்பில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் அவருடைய வயது விபத்து சமயத்தில் 75 என்பது தெரிந்துவிடும் என்பதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.என் கணவர் ரங்கசாமி இறந்து போன செங்கோடனுக்கு என்ன உறவு முறை என்றால் செங்கோடனின் மகன் ஆவார். என் கணவர்,இறந்துவிட்டார் என்பதை காண்பிக்கவும் அவருடைய வாரிசுகள் யார் என்று காண்பிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் இறந்து போன ரங்கசாமியின் வாரிசுகள் என்று கட்சி சேர்க்கப்பட்டுள்ள மூன்று முதல் ஐந்து மனுதாரர்களின் கோரிக்கை ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. செங்கோடன் இறந்த பின்பு இந்த வழக்கில் இரண்டு முதல் ஐந்து மனுதாரர்கள் சேர்த்து திருத்தப்பட்ட மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரி. திருத்தப்பட்ட மனுவில் செங்கோடன் எப்போது இறந்தார் என்றோ என்ன காரணத்தினால் இறந்து போனார் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. திருத்தப்பட்ட மனுவில் எந்த காரணமும் சொல்லாமல் முதல் விசாரணை வாக்கு மூலத்தில் மட்டும் விபத்து காரணமாக ஏற்பட்ட காயத்தினால் செங்கோடன் இறந்து விட்டதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையிலும் செங்கோடன் எப்போது இறந்து போனார் என்று சொல்லப்படவில்லை என்றால் சரி. செங்கோடன் இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய உடல் பிரேத பரிசோதனைக்கு

உட்படுத்தப்படவில்லை என்றால் சரி. செங்கோடன் இறந்த போது அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று காண்பிக்க கூடிய ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உரிய ஆவணங்கள் ஏதுமின்றி செங்கோடனின் இறப்பிற்கு காரணம் விபத்து காயம் தான் என நான் கூறியுள்ளதை ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சிறுநீரகக் கோளாறுக்கு சிகிச்சை பெற்று சம்பந்தமான ஆவணம் தான் மசாஆ 11 என்றால் சரி. மசாஆ 11 விபத்து நடந்து மூன்று ஆண்டுகள் கழித்து உள்ள ஆவணம் என்றால் சரி. விபத்தினால் செங்கோடனுக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மசாஆ 11 க்கும் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எனவே மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் நஷ்ட ஈடு கேட்க முடியாது என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக வைத்தியம் பார்ப்பதற்காக மசாஆ 11 பில்கள் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்புகள் இல்லை என்றால் சரி , அந்த காரணத்தை காண்பிக்க கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. இறந்து போன செங்கோடனுக்கு சிறுநீரகக் கோளாறுக்கு சிகிச்சை பெற்ற அனைத்து ஆவணங்களும் என்னிடம் உள்ளது என்றால் சரி. சிறுநீரக சிகிச்சை பெற்ற ஆவணங்களை பார்த்தால் அவருக்கு சிறுநீரக பிரச்சனை எதனால் ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் ஆமாம் , அந்த ஆவணங்கள் தொலைந்து விட்டது. சிறுநீரக சிகிச்சை சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்தால் அந்த பிரச்சனை விபத்துனால் ஏற்படவில்லை என்பது தெரிந்து விடும் என்ற காரணத்தினால் தான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.மசாஆ 11 ன் படி கேட்க முடியாது என்றும் நடந்த விபத்துக்கும் மசாஆ 11 க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. டிஎன் 56 45 73 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி வேன் உரிய தகுதி சான்று இல்லாமல் ஓட்டிச் சென்றுள்ளார் என்றும் மேற்படி வாகனத்திற்கு வழங்கப்பட்ட தகுதி சான்று 17.05.2016 ம் தேதியே காலாவதி ஆகிவிட்டது என்றும் அதன் பின்பு அந்த தகுதிச் சான்று

புதுப்பிக்கப்படவில்லை எனவும் இந்த விபரங்கள் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும் வாகனத்தை இயக்க அனுமதித்துள்ளார் என்றும் எனவே இரண்டாவது எதிர்மனுதாரர் பாலிசி விதி மீறல் செய்துள்ளார் என்றும் ஆகையினால் மூன்றாம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 12 தொகைகள் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சைக்கு செலவானது என்பதை காண்பிக்க ஆவணங்கள் இல்லை என்றும், எனவே அந்த தொகைகள் திரும்பக் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மசாஆ 12 உண்மையான ஆவணமல்ல என்றும் அதன் அடிப்படையில் நஷ்ட ஈடு கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 5 லேயே விபத்து சமயத்தில் ஒன்றாம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு உரிமைச் சான்று இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே மூன்றாம் எதிர் மனுதாரரிடம் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. எவ்வாறு இருப்பினும் நான் கூறியுள்ள நஷ்ட ஈடு தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் ரூபாய் 10 லட்சம் நஷ்ட ஈடு வேண்டுமென்று கோரி உள்ளேன், ஆனால் திருத்தம் செய்யப்பட்ட மனுவில் ரூபாய் மூன்று லட்சம் தான் நஷ்ட ஈடு கோரப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரி. மனு சங்கதிகளுக்கு விரோதமாக எந்த நஷ்ட ஈடும் நான் கோர முடியாது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 06.03.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS